Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Virtue in *Arappaleeswara Sathakam*

**Dr R.Sorna Bamila,** AssistantProfessor of Tamil, S.T.Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.6620995**

## Abstract

*'Arappaleeswura sathagam' is one of 96 sitrilakkiyam in which Lord Shiva is the head of poems. In this work, the virtues of human beings to be maintained use of education, Teacher –students' relationship, and the concept of mercy were described in a perfect and lucid manner. Moreover, the eligibility of a king is also mentioned. Therefore "Arappaleesura sathagam is considered as Didactic Literature. Hence, the article cull down the certain facts found in the work with support to the quotations.*

**Keywords**: Aram, *Arappaleeswara Sathagam*, Sitrilakkiyam.

## References

[1] Kathitrmurugu. Arappaleesura sathagam, saratha pathipagam, Chennai - 600014.
[2] Sivakami.S. *Ilakiya porul pagupaivu*. ulaga tamil aarachi niruvanam, Chennai.
[3] Poovai Amuthan. *Thirukkural*. Kavita Publication, T.Nagar, Chennai-600017.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# *அறம் கூறும் அறப்பளீசுர சதகம்*

**முனைவர் இரா. சொர்ணபமிலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,

தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**

**DOI: 10.5281/zenodo.6620995**

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்கள் உலகில் அறம் சார்ந்த இயங்கு பொருளாகத் திகழ்கிறது. தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான அறப்பளீசுர சதகம் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டாலும் மனித வாழ்விற்கு தேவையான ஒழுக்க நெறிகளை எடுத்துரைத்து மனித மனத்தை செம்மைப்படுத்துகிறது. மாணவர் நல்லகல்வியால் கிடைக்கும் பயன் பற்றியும், ஆசிரியர் மாணவர் மாண்பு, உயிர்களிடம் இரக்கம் காட்டும் அறச்சிந்தனையாளர்கள், நல்லறங்கள் ஒருவர் செய்வாரானால் கிடைக்கும் நன்மைகள், நாடாளும் மன்னருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றியும் எடுத்துரைத்து நீதி இலக்கியமாக தோற்றமளிக்கிறது அறப்பளீசுர சதகம்.*

**கருச்சொற்கள்:** அறம், *அறப்பளீசுர சதகம்*, சிற்றிலக்கியம்.

**முன்னுரை**

தனிமனிதனாயினும், சமுதாயமாயினும் முழுமையான நிலையில் சிறப்புற வாழ வழி வகுப்பது அறமாகும். இலக்கியத்தின் நோக்கம் எதுவாயினும் அது சமுதாயத்திற்கு பயன்படவேண்டும் என்பது பொதுவாக கருத்து. அதனால் தான் தனிப்பாடல் காப்பியம், சிறுகதை, புதினம் என படைப்பாளர்கள் அதனுள் நல்ல பண்புகளை பழக்கவழக்கங்களை நேரிடையாகவோ அல்லது குறிப்பாகவோ உணர்த்துகின்றனர். தனிமனிதனை அவன் சார்ந்த சமுதாயத்திற்குச் சீர் செய்தல் என்ற நோக்கில் அமையும் அறம், அதன் சிறப்பால் முக்கியத்துவத்தால் இலக்கியத்துள் நிலைத்த அமைப்பை பெற்றுள்ளது. அவ்வகையில் சதக இலக்கியங்களில் ஒன்றான அறப்பளீசுர சதகம் கூறும் அறம் சார்ந்த கருத்துக்களை இவ்வாய்வு கட்டுரை வழி அறியலாம்.

**அறப்பளீசுர சதகம்**

தமிழில் நெடும்பாடல்களால் அமைந்த பிரபந்த வகைகளைச் சிற்றிலக்கியம் என்று குறிப்பிடுவர். அறப்பளீசுர சதகம் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான சதகம் வகையைச் சார்ந்தது. அறப்பளீசுவராகிய சிவபெருமானைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு நூறு பாடல்களால் அம்பலவாணக்கவிராயரால் கி.பி 18 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. மக்களின் நல்வாழ்விற்கு தேவையான அறகருத்துக்களையும், நம்பிக்கை சார்ந்த செய்தியை எடுத்துரைத்து நீதி இலக்கியமாக தோற்றமளிக்கிறது.

**கல்வி நல்கும் நல்வினை**

கல்வி ஒவ்வொருவருக்கும் இன்றியமையா வினையாகிறது வாழ்க்கையில் நல்லது எது? தீயது எது?என்பதனைச்சீர்தூக்கஉதவுவதுஅறிவு. அவ்வறிவினைநல்குவது கல்வியாகும். கல்வியை கற்கவேண்டிய முறைப்படி கற்றுக் கற்ற வழி நடக்கவேண்டும். பொருளை தேடி அந்த பொருளால் அறம்

செய்து நல்லொழுக்கம் உடையவர்களுடன் நட்புகொண்டு, விட்டு பிரியாமல் வாழ வேண்டும். புதிய அறச் சாலைகளை நிறுவி நிறுவியதோடல்லாமல் அவற்றைத் தொடர்ந்து நடத்தல் வேண்டும்.

வெட்டப்பட்ட சந்தனக்கட்டை அளவால் குறைந்தாலும் மனத்தால் மாறுபடாதது சிறந்த வைரக்கல் தூது படிந்தாலும் அதன் ஒளியில் குறையாத தன்மை உடையது. அது போலவே படித்தவர்களின் பெருமையை அறிவற்றவர்கள் அறியாவிட்டாலும், அவர்களின் பெருமை என்றும் குறையாது அவர்கள் எந்நாளும் உயர்வுடன் வாழ்ந்திருப்பார்கள் என்பதை அறப்பளீசுர சதகம்,

**கற்ற பெரியோர் மகிமை அற்பர் அறிகிலரேனும்**
**காசினி தனிற் போகுமோ?**
**அறிவுற்ற பேரை விட்டு அகலாத மூர்த்தியே**
**ஐயனே அருமை மதவேள் (அற. சத. பா :23)**

என்கிறது.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக (குறள் :391)**

கற்பதோடு மட்டுமல்லாமல் தான் கற்றறிந்த நூல்களின் படி ஒழுக்கமாக வாழ வேண்டும் என்பதை வள்ளுவர் பின்வரும் குறள் வழி உரைக்கிறார்.

**ஆசிரியர் மாண்பும் மாணவனும்**

நல்ல மகன் என்பவன் தனது குலமானது புகழ்பெற பெரியோர்கள் செய்த அறங்களை இடைவிடாது செய்து தானத் தருமங்களை நல்லவர்களுக்கு கொடுக்க வேண்டும். தனது பெற்றோர் மற்றும் ஆசிரியர் சொற்களை மீறாமல் இருப்பவனிடம் நல்ல குணமும், நீண்ட ஆயுளும், கல்வி அறிவும், ஒழுக்கமும், நிறைந்திருக்கும் அத்தகைய மகனை பெற்றவனே நல்வினை உடையவனாவான் என்கிறார் அம்பலவாணக்கவிராயர். ஆசிரியர் தன்னை திட்டினாலும், துன்பங்கள் கொடுத்தாலும், இழிவுப்படுத்தினாலும் சிறிதும் மனம் மாறாமல் அன்னையும், தந்தையும் நீயே! எனக்கூறி ஆசிரியனின் திருவடியை வணங்கி கல்வி அறிவு பெறுபவனே நல்ல மாணவன். அவனிடம் தான் உண்மை அன்பும், தியாக மனப்பான்மையும் வெளிப்படும். நல்லாசிரியர் என்பவர் சிறந்த ஒழுக்கம், விஞ்ஞான அறிவு, நிறைந்த கல்வி, நல்ல குணம், உண்மையாகிய செல்வம், நிறைந்த வீரம், தலைமைப்பண்பு, இரக்கக்குணம், யோகத்தின் நிறைவு, சமாதி யோகத்தில் பயிற்சி, ஆறு சமயக் கோட்பாடுகளில் நிறைவு, மந்திர தந்திர அறிவு, பிற மதங்களை அறிந்து உண்மை நிலை அறிதல், பற்று நீங்குதல் எனும் குணங்கள் அனைத்தையும் கைவரப் பெற்றவராக இருக்க வேண்டும் என்கிறது அறப்பளீசுர சதகம்.

**அழகு தரும் அணிகலன்கள்**

வளர்கின்ற வளர்ச்சியால் பயிரின் நிலையை அறிதல் போல ஒருவரின் பேச்சால் அவர் கல்விகற்றவர் என அறிந்து கொள்ளலாம். பார்கின்ற பார்வையாலும், நடக்கின்ற நடையினாலும் கற்புடைய பெண்கள் என்பதை அறியலாம். உயிர்களிடம் இரக்கம் காட்டுபவர்களைஅறச்சிந்தனையாளர்எனஉணரலாம். இவ்வாறு ஒருவரின் சொல் அவரின் குணத்தை அறிவிக்கும் அழகாக இடம் பெறுகிறது.

**தூய தவம் மேன்மை, உபகாரம், விரதம், பொறுமை**
**சொல்லரிய பெரியோர்களைத்**
**தாழ்தல், பணி விடைபுரிதல், சீலம், நேசம், கருணை**

**சாற்றுமிவை அழ கென்பர்காண் (அற. சத. பா :9)**

குடும்பத்திற்கு அழகு தருபவள் சிறந்த குணமுடைய பெண்கள் என்றும், அப்பெண்ணின் வாழ்விற்கு நலம் செய்வோர் சிறந்த மக்களாவர். நன்கு வளரும் சிறுவர்களுக்கு அழகு தருவது கல்வி என்றும், அக்கல்வியால் சிறப்பு தருவது நல்ல பணி என்றும், அப்பணிக்கு சிறப்பு செய்வது நல்லறிவு என்றுரைத்து பெருந்தன்மை, நல்லதவம் பிறருக்கு உதவி செய்தல், நோன்பு, பொறுமைக்குணம், பெரியோரை மதித்தல், தொண்டு உள்ளம், சைவப்பற்று, அருட்குணம் இவை எல்லாம் தான் ஒரு மனிதனை அழகுப்படுத்து அணிகலன்கள் என்கிறார் சதக நூலாசிரியர்.

**நல்லறங்கள்**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள்:45)**

குடும்ப வாழ்க்கையில் அன்பு இருந்தால் அது பண்புடைய வாழ்க்கையென்றும், அறம் இருந்தால் பயனுடைய வாழ்க்கையென்றும் இல்வாழ்க்கை இருவகைப்படுத்திக் கூறுகிறார் வள்ளுவர்.

**சந்ததம் செய்கடனை யென்றும் இவை பிழையாது**
**தான் புரிந்திடல் இல்லறம்**
**சாரு நலம் உடையராம் துறவறத் தோரும் இவர்**
**தம்முடன் சரியா யிடார் (அற. சத. பா :95)**

அறப்பளீசுர சதகமும் நல்லறங்கள் செய்வதே இல்லறமாகும் என பயனுடைய வாழ்க்கையை எடுத்துரைக்கிறார். தந்தை, தாய், ஆசிரியன், தெய்வங்கள், ஒழுக்கமுடைய மனைவி, உறவினர்கள், குறிப்பறிந்து வேலை செய்யும் பிள்ளைகள், தன்னிடம் அடைக்கலமாக வந்தவர்கள், தொண்டு செய்பவர்கள், முன்னோர்கள், ஏழைகள், விருந்தினர், உடன்பிறந்தவர், பசு, அந்தணர்களை ஆதரித்தவர்கள் இவற்றை எல்லாம் எப்போதும் தமது கடமை எனச் சரியாகச் செய்வது தான் இல்லறம் என்கிறார். துறவு வாழ்க்கையை மேற்கொள்பவர்கள் கூட இவர்களுக்கு நிகராக மாட்டார்கள். நல்லறங்களின் வழி நிற்பவர்கள் வேறு அறங்கள் செய்ய வேண்டியதில்லை என்கிறார்.

**அறச்செயல்கள்**

மக்கள் வாழ்க்கையில் நலம் பெற முப்பத்திரண்டு அறங்கள் செய்தல் வேண்டும் என்கிறார் அம்பலவாணக்கவிராயர். பிள்ளை பெறுபவர்களுக்கு வீடு கொடுத்தல், வேண்டிய பொருள்களைக் கொடுத்தல், காதணி கொடுத்தல், குழந்தைகளுக்குத் தினமும் பால் கொடுத்தல், சத்திரம் கட்டுதல், மடம் கட்டுதல், பசுக்களின் திமிர் நீங்கக் கல் நடுதல், பெண்களுக்கு இன்பம்கொடுத்தல், நாவிதனுக்குஉதவுதல், கண்ணாடி கொடுத்தல், தாகம் தீர்த்தல், தலைக்கு எண்ணெய் கொடுத்தல், பசுக்களுக்கு தீவனமிடுதல், ஆதரவற்ற பிணத்தை அடக்கம் செய்தல், குளம் வெட்டுதல், இறக்கும் நிலையிலுள்ள உயிரைக்காத்தல், உணவு கொடுத்தல், சிறையில் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல், துன்பத்தைப் போக்குதல், சோலை அமைத்தல், முறைப்படி திருமணம் செய்தல், விலங்குகளுக்கு உணவு கொடுத்தல், பிச்சைக்காரர்களுக்குப் பொருள் கொடுத்தல், ஆறு வகை சமயத்தவர்களுக்கு உணவு கொடுத்தல், கோயில் கட்டுதல், மருந்து கொடுத்தல், கல்வி கற்பவர்களுக்கு உதவுதல் ஆகிய முப்பத்திரண்டு அறச்செயல்களும் மனித வாழ்க்கையை நல்வழி படுத்துவனவாகும்.

**அறம் சார்ந்த வாழ்வு**

**புவி மீது தலைபோகும் என்னினும் கனவிலும்**

**பொய்மை யுரையாத பேரும்**
**ஐய இங்கு இவரெலாம் சற்புருடர் என்றுலகர்**
**அகமகிழ்வர்! அருமை மதவேள் (அற. சத. பா :16)**

எந்த நிலையிலும் ஒருவர் செய்த நன்றியை மறக்காதவர்களும், பிறர் செய்த தீய செயலை மறந்தவர்களும், பிறர் மனைவி மீது ஆசை கொள்ளாதவர்களும், கீழே கிடந்த பொருளை உரியவரிடம் ஒப்படைத்தவர்களும் அறம் அழியாமல் காக்கின்றவர்களும் செல்வம் கிடைக்கும் என்று பொய் கூறாதவர்களும் இத்தகைய சான்றாண்மைக் குணத்தில் இருந்து மாறாமல் வாழ்பவர்களே நன்மக்கள். அவர்களே அறம் சார்ந்த வாழ்க்கையை வாழ்பவர்கள். ஏனெனில் மற்றவர்களுக்கு பயன் இன்றி வாழும் வாழ்க்கையால் எந்த பயனும் கிடைப்பதுஇல்லை.

**நாடாளும் தகுதி**

மன்னன் மனுவினால் ஏற்படுத்தப்பட்ட அரசு நெறிமுறைகளையும் அறிந்து கொண்டு சிறந்த பயிற்சி பெற்ற போர் வீரர்கள், காலம் இடம் உணர்ந்த படைத்தலைவர்கள், குறையாத தானிய வளமும், வெளியிலிருந்து குடியேறும் குடிகள் இவற்றை எல்லாம் சரியாக அமைத்து கொண்டாலே மன்னன் மட்டுமன்றி அவனது நாடும் நலம் பெறும். மன்னன் தன் வலிமையினையும் மாற்று அரசனின் யுத்திகளையும் ஆராய்ந்து அறியும் அறிவும் உடையவன். மன்னனின் கருத்து, காலம், இடம், வாழ்கின்ற மக்கள், படைகள் ஆகியவற்றின் ஆற்றல் அறிந்தவன் அமைச்சன். படை இயல்பு, யானை, குதிரைகளின் சிறப்பு, பகைவர்களின் சூழ்ச்சி, பின் வாங்காத வெற்றி, உறுதியான வலிமை உடையவனே படைத்தலைவன்.இவ்வாறு எல்லாத்திறனும் உடையவர்கள் தான் மன்னர்களாகவும், அமைச்சர்களாகவும், படைத்தலைவனாகவும் விளக்க முடியும்.

**கணக்கன் திறன்**

அரசன் மட்டுமின்றி அரசுக்கணக்கன் கூட திட்பநுட்பம் நிறைந்தவனாக இருக்க வேண்டும் என்பதை சதக நூல் எடுத்துரைக்கிறது.

**கருவாய் அறிந்து தொகை யீராறு நொடியினிற்**
**கடிதேற் றிடக் குறைக்கக்**
**கடுகையொரு மலையாக மலையையொரு**
**காட்டுவோன் கருணீகன் ஆம் (அற. சத. பா :86)**

அரசாங்க எழுத்தாளன் ஓலையில் எழுதியிலிருக்கும் பொருளைக் கொண்டு ஓலை அனுப்பியவனின், இடத்தையும் காலத்தையும் மனத்தால் உணர்ந்து மன்னனின் நினைவிலுள்ள சிந்தனையை மதிப்பிடவும் எழுதவும், வாசிக்கவும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியவன் ஆவான். மேலும் தொகையை மனத்தில் விரைவாகக் கூட்டவும், குறைக்கவும் அதாவது கடுகை மலை போலவும், மலையைக் கடுகு போலவும் ஆக்கிக்காட்ட வல்லவன் அரசாங்கக் கணக்கன் என அவனது தகுதியை விளக்குகிறார் ஆசிரியர்.

**முடிவுரை**

அறப்பளீசுரசதகம் அறப்பளீசுவரனாகிய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பட்டதாகும். அறம் எனப்படுவது பிற உயிரினங்களுக்கு தீங்கு செய்யாமலும், உண்மை வழியில் நடப்பதே அறமாகும். கல்வியால் அறியாமை வினை அகன்று நல்வினை புத்துயிர் பெறுகிறது. இச்சமூகத்தில் ஆசிரியர் மாணவர் உறவு என்பது இன்றியமையாத ஒன்றாகும். நல்லாசிரியர் தன்

வாழ்நாளில் கற்று வலுமிக்க வளமான நல்ல மாணவர்களை உருவாக்குகிறார். வாழ்வியல் கூற்று என்பது நல்லறங்கள் வழியே நடைபெறுவது நன்மை தருவதாக அமைவதாகும். இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பிறப்பு முதல் இறப்பு வரை அறசெயல்களை மட்டுமே செய்து அறம் சார்ந்த வாழ்வியலை வாழ்வான் ஆயின் நாடாளும் தகுதியை பெறுவான் என்கிறது அறப்பளீசுர சதகம் ஆகையால் நாம் அனைவரும் அறவழியில் நடப்போம், நல்வாழ்வினை வாழ்வோம்.

**துணைநின்ற நூல்கள்**

[1] கதிர் முருகு. *அறப்பளீசுர சதகம்*. சாரதா பதிப்பகம், சென்னை – 600014.

[2] சிவகாமி, ச. *இலக்கிய பொருட்பகுப்பாய்வு*.உலகத்தமிழாராய்ச்ச நிறுவனம், சென்னை.

[3] பூவை அமுதன். *திருக்குறள்*. கவிதா பப்ளிகேஷன், தி.நகர், சென்னை -600017.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.